DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.211/2023**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவதாணு |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமநாதன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.02.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் கடந்த 30.05.2023 அன்று தேவகோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 49 வயது மதிக்கத்தக்க தமிழரசி என்ற நபர் அவரது சகோதரரால் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை 2 இனம் தெரிந்த ஆண் நபர்கள் அன்றைய தினம் இரவு 9 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது பக்க நெஞ்சில் கீரிய காயம் 6X0.5X0.2cm அளவில் இருந்தது. முதுகிலும் நெஞ்சிலும் ரத்தக்கட்டு இருந்தது . அவரை உள்நேயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு தலைக்கு CT brain எடுத்து பார்த்ததில் எந்த ஒரு காயங்களும் தென்படவில்லை. தலைக்கு நுன்கதிர் படம் எடுத்து பார்த்ததில் எந்த

ஒரு  எலும்பு முறிவும் தென்படவில்லை. ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்றிதழ் வழங்கினேன். அவர் 04.06.2023 அன்று சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். (**காயம்பட்ட தமிழரசியின் விபத்து பதிவேடு மற்றும் பின்புறம் காயச்சான்றிதழ் அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இடது பக்க நெஞ்சில் இருந்த கீரல் காயத்தை தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டிருக்கவும் வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட தமிழரசி முதுகில் உள்ள ரத்தக்கட்டு தமிழரசியை அழைத்து வந்த அவருடைய தம்பி தாக்கி ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு என்றால், அது பற்றி சொல்ல இயலாது யார் தாக்கினாலும் காயம் ஏற்படும். நான் போலீசார் விசாரணையில் அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள் என்று சொன்னதாகதான் என்று சொல்லியுள்ளேன் என்றும் யார் யார் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அன்று இரவு 9 மணிக்கு அடையாளம் தெரியாத நபர்கள் கண்மாய்க்கரையில் வைத்து  தாக்கியதாக காயம்பட்டவர் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வீட்டில் வைத்து தாக்கியதாக சொன்னதாகதான் சொல்லியுள்ளேன்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,<br>குற்றவியல் நடுவர்,<br>தேவகோட்டை. |